www.tamilarangam.net

# 32 வங்கிகளில் மொத்தம் 31½ லட்சம் ரூபா கொள்ளை!

## திருநெல்வேலிமக்கள்வங்கி கொள்ளையே மிகப் பெரியது

கொழும்பு, டிச. 13

கடந்த 21 மாத காலத்தில் நாட்டில் உள்ள 32 வங்கிக் கிளைகளில் 31½ லட்சம் ரூபா கொள்ளையடிக்கப்பட்டு இருக்கிறது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள நாற்பது வங்கிக் கிளைகளில் எட்டு வங்கிக் கிளைகள் கொள்ளையடிக்கப்பட்டன.

32 வங்கிக் கிளைகளிலும் பெருந் தொகையான பணம் கொள்ளையடிக்கப்பட்டது திருநெல்வேலி மக்கள் வங்கிக் கிளையில் ஆகும்.

திருநெல்வேலி மக்கள் வங்கிக் கிளையில் கொள்ளையடிக்கப்பட்ட தொகை 11 லட்சத்து 80 ஆயிரம் ரூபா.

கொள்ளையடிக்கப்பட்ட வங்கிக் கிளைகளில் சில வருமாறு:—

ஆனைக்கோட்டை இலங்கை வங்கிக் கிளை: ரூபா 28,600. கோப்பாய் கிராமிய வங்கிக் கிளை: ரூபா 10,500. கருவாஞ்சிக்குடி இலங்கை வங்கிக் கிளை: ரூபா 13,000. மானிப்பாய் இலங்கை வங்கிக் கிளை: ரூபா 2,86,000. காரைநகர் கிராமிய வங்கிக் கிளை: ரூபா 16,036. ஏரூர் கிராமிய வங்கிக் கிளை: ரூபா 1,77,000. திருகோணமலை இலங்கை வங்கிக் கிளை: ரூபா 55,000. திருநெல்வேலி மக்கள் வங்கிக் கிளை; ரூபா 11,80,000.

இக் கொள்ளைகளில் மிகவும் பரபரப்பை ஏற்படுத்தியது திருநெல்வேலி மக்கள் வங்கிக் கொள்ளையாகும். மிக நுணுக்கமாகத் திட்டமிட்டு ஏழே நிமிடங்களில் பிரஸ்தாப வங்கி கொள்ளையடிக்கப்பட்டிருக்கிறது. (த- 17)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்